அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் :- 05/2015

எனது இல. EST-7/OFTIM/07/1011

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ

அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07.

2015.10.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

**<u>அரசாங்க அலுவலர்களின் அலுவலக நேரம்</u>**

1980.04.01 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 162 இன் 09 ஆம் பந்தி தொடர்பாக தங்களது அவதானம் கோரப்படுகின்றது.

02. அவ் ஏற்பாடுகளின் பிரகாரம், 2006.04.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் வகைப்படுத்தலுக்கு அமைய ஆரம்ப தரத்திற்குரிய அலுவலர்களின் அலுவலக நேரம், 30 நிமிட மதிய உணவு இடைவேளை உட்பட முப. 8.00 மணியிலிருந்து பி.ப. 4.45 வரை ஆகும். பி.ப. 4.15 இற்குப் பிறகு அலுவலகப் பணிகள் ஏதும் இல்லையாயின் அவ் அலுவலர்களுக்கு பி.ப. 4.15 இற்குப் பின்னர் அலுவலகத்தில் இருந்து வெளியேறுவதற்கு திணைக்களத் தலைவரின் அனுமதி பெறப்படல் வேண்டும். மேலதிகநேர வேலை கணக்கெடுப்பின் போது மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 4.45 வரையிலான காலம் அலுவலக வேலை நேரமாக கருதப்பட வேண்டும்.

03. அவ்வாறே, எந்தவொரு பணி தொடர்பாகவும் தரப்படுத்தப்பட்ட அலுவலக நேரம் குறிப்பிடப்படவில்லை. அரசாங்க அலுவலர்களின் அலுவலக நேரம் சம்பந்தமாக 2006.05.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 09/2006 இன் ஏற்பாடுகள் தொடர்ந்தும் அமுலிலுள்ளது.

ஒப்பம்/. ஜே. தடல்லகே

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு